

**IRCC-ஆல் நிதியுதவி அளிக்கப்படும் சேவைகளைப் பயன்படுத்தும் பெற்றோர்களுக்கானது**

# புதிதாக வரும் பிள்ளைகளுக்கான பராமரிப்புப் (CARE FOR NEWCOMER CHILDREN – CNC) பற்றியது

***நல்வரவு! கனடாவுக்குப் புதிதாக வரும் பிள்ளைகளும், அவர்களுடைய குடும்பத்தவர்களும் IRCC - ஆல் நிதியுதவி அளிக்கப்படும் சேவைகளைப் பயன்படுத்தும்போது, அவர்களுக்கு ஆதரவளிப்பதற்கென எங்களுடைய CNC திட்டம் வடிவமைக்கப்பட்டுள்ளது. உதவிசெய்வதற்காகவே நாங்கள் இங்கு இருக்கின்றோம்.***

***உங்களுக்கும், உங்களுடைய குடும்பத்திற்கும் இது ஒரு மிகப் பெரிய மாற்றத்துக்கான காலம் என்று எங்களுக்குத் தெரியும். உங்களுடைய குடும்பம் கனடாவில் குடியேறுகின்றபோது, உங்களுடைய பிள்ளையின் வளர்ச்சிக்கு ஆதரவளிப்பதுடன் அவர்களுடைய தன்னம்பிக்கையைக் கட்டியெழுப்பி, உங்களுடைய பிள்ளை வரவேற்பு, பாதுகாப்பு மற்றும் பத்திரத்தை உணரச்செய்தலே எங்களுடைய இலக்காகும்.***

**CNC திட்டத்தில் உங்களுடைய பிள்ளை பங்குகொள்ளும்போது அந்த அமைவிடத்தில் பெற்றோர் எப்போதும் இருக்க வேண்டும்.**

## உங்களுடைய பிள்ளையின் பாதுகாப்புத்தான் மற்ற எல்லாவற்றையும்விட மிகவும் முக்கியமாகும்!

எங்களுடைய பணியாளர்கள் தகுதி மற்றும் அனுபவம் உள்ளவர்கள் என்பதை நீங்கள் உறுதியாக நம்பலாம்.

- அனைத்துப் பணியாளர்களினதும் பின்புலம்/ குற்றவியல் பதிவுகள் ஆராயப்படுவதுடன் அவர்களுக்கு முதலுதவிப் பயிற்சியும் வழங்கப்படுகிறது.
- ஆரோக்கியம் மற்றும் பாதுகாப்புத் தர நியமங்களை நாங்கள் பூர்த்திசெய்வதை உறுதிப்படுத்துவதற்காக CNC நியமங்களை நாங்கள் பின்பற்றுவதுடன் கண்காணிக்கப்படுகின்றோம்.
- அனைத்துச் சிறுவர்களும் மரியாதையுடன் சமமாக நடத்தப்படுவதை உறுதிசெய்வதற்காக எங்களிடம் நடத்தை கையாளல் கொள்கை இருக்கின்றது. நடத்தைகளை நேர்முகமான வழிகளில் பணியாளர்கள் வலுப்படுத்த வேண்டும். சிறுவர்களை உடல் ரீதியாகத் தண்டித்தல், அவர்களுடன் கடுமையாகக் கதைத்தல், அவர்களைப் புறக்கணித்தல் அல்லது அவர்களுக்குப் போதுமான மேற்பார்வையின்மை போன்றவை அனுமதிக்கப்படுவதில்லை.
- பிள்ளை ஒன்று துன்புறுத்தப்பட்டிருக்கக்கூடிய அல்லது புறக்கணிக்கப்பட்டிருக்கக்கூடிய சூழல்களை அதற்குரிய அதிகாரிகளுக்கு அறிவிக்கவேண்டிய தொழில்முறை கடமை மற்றும் சட்டபூர்வமான கடப்பாடு பணியாளர்களுக்கு இருக்கிறது.

மேலும் அறிவதற்கு உங்களுக்கு ஆர்வமிருந்தால், எங்களுடைய நடத்தை கையாளல் கொள்கை அல்லது சந்தேகத்துக்குரிய பிள்ளை துன்புறுத்தல்/ புறக்கணித்தல் கொள்கையின் பிரதி ஒன்றை எங்களிடம் கேட்பதற்குத் தயங்காதீர்கள்.

## CNC இடமிருந்து நீங்கள் எதை எதிர்பார்க்கலாம்?

குழு நிலையில் பிள்ளைகளை நாங்கள் கனடாவில் பராமரிக்கும் விதம் உங்களுடைய நாட்டில் பராமரிக்கும் விதத்திலிருந்து வேறுபட்டதாக இருக்கலாம். ஒழுங்காட்சி, உணவு, கல்வி அல்லது நடைமுறைகள் பற்றி உங்களுக்கு ஏதாவது கேள்விகள் இருந்தால், தயவுசெய்து கேளுங்கள். விளையாட்டின் மூலம் பிள்ளைகள் கற்கின்றார்கள் என ஆய்வுகாட்டுகிறது, எனவே பிள்ளைகளின் ஆர்வம், வயது மற்றும் கலாச்சாரத்துக்கு ஏற்ப விளையாட்டின் அடிப்படையிலான கல்விச் செயற்பாடுகளைப் பணியாளர்கள் திட்டமிடுகிறார்கள். உங்களுடைய பிள்ளை ஏனைய பிள்ளைகளுடன் பழகுவதுடன் பாடசாலைக்கு அவரைத் தயார்செய்யும் திறன்களை விருத்திசெய்வார்.

## CNCக்கு உங்களுடைய பிள்ளை இசைவாக்கப்பட நீங்கள் எப்படி உதவிசெய்யலாம்?

CNCஐ ஆரம்பிப்பது தொடர்பாக உங்களுடைய பிள்ளைக்கு அச்சம் இருப்பது பொதுவானது. நிலைமாற்றத்தைச் சுலபமாக்குவதற்காக உங்களுடன் இணைந்து பணியாளர்கள் பணியாற்றுவார்கள். ஆனால் உங்களுடைய பிள்ளை அழக்கூடும், உங்களுடன் ஒட்டிக்கொண்டிருக்கக்கூடும் அல்லது வேறுவிதமான நடத்தைகளைக் காட்டக்கூடும். உங்களுடைய பிள்ளையின் அச்சங்களை எளிமையாக்குவதற்கு எப்படி நீங்கள் உதவலாம் என்பது பற்றிய யோசனைகளுக்கு இதன் பிரதி ஒன்றைக் கேளுங்கள்: *CNCக்கு நல்வரவு: படிப்படியாகப் பிரிதல் பற்றிய பெற்றோருக்கான ஒரு வழிகாட்டி* (*Welcome to CNC: A Parent's Guide to Gradual Separations*).

## பெற்றோர்களுக்கும் பணியாளர்களுக்குமான தொடர்பாடல் முக்கியமாகும்!

CNC பணியாளர்களை நீங்கள் அறிந்திருப்பதற்கும் உங்களுடைய பிள்ளை பற்றிய தகவல்களைப் பங்கிடுவதற்கும் உங்களை நாங்கள் ஊக்குவிக்கின்றோம். நாங்கள் சேர்ந்து இயங்கும்போது, உங்களுடைய பிள்ளைக்கு சிறப்பாக ஆதரவளிக்கவும் அவரைப் பாதுகாப்பாக வைத்திருக்கவும் எங்களால் முடியும்.


*Funded by: Immigration, Refugees and Citizenship Canada / Financé par : Immigration, Réfugiés et Citoyenneté Canada*

# புதிதாக வரும் பிள்ளைகளுக்கான பராமரிப்புப் (CNC) பற்றியது

## பின்வருவனவற்றைப் பணியாளர்களுக்குச் சொல்வதை உறுதிப்படுத்துங்கள்:

- ஒவ்வாமைகள் அல்லது உணவுக் கட்டுப்பாடுகள்;
- உங்களுடைய பிள்ளையின் நலமின்மைகள் அல்லது அவர் எடுக்கின்ற மருந்துகள் (தயவுசெய்து கவனிக்கவும்: உயிருக்கு ஆபத்தான நிலைமைகளில் மட்டுமே மருந்துகள் கொடுக்கப்படும் அத்துடன் உங்களுடைய பிள்ளையுடன் அல்லது அவரின் பைக்குள் அவை இருக்கக் கூடாது);
- ஏதாவது விசேட தேவைகள் அல்லது சவால்கள். அவர்களால் உதவிசெய்யக்கூடியதாக இருக்கலாம்!

## பின்வருவனவற்றைப் பணியாளர்களுக்குச் சொல்வதும் உதவியாக இருக்கலாம்:

- உங்களுடைய பிள்ளையின் பகல் நித்திரை அல்லது உணவு நேரங்கள்;
- உங்களுடைய பிள்ளையின் ஆர்வங்கள் மற்றும் விருப்பமான உணவுகள்;
- உங்களுடைய பிள்ளையுடன்பணியாளர்கள் தொடர்புகொள்ள உதவக்கூடிய சொற்கள்;
- குடும்பத்தவர் மற்றும் சகோதரர் பற்றிய தகவல்கள் (குடும்பப் படமொன்றைக் கொண்டுவாருங்கள்);
- மற்றும் உங்களுடைய பிள்ளையை நீங்கள் பராமரிக்கும் விதங்கள் அத்துடன் CNC இடமிருந்து நீங்கள் எதிர்ப்பார்ப்பவை.

## மனதில் வைத்திருக்க வேண்டிய ஏனைய விடயங்கள்:

- உங்களுடைய பிள்ளையின் பாதுகாப்புக்காக, பதிவுசெய்த பெற்றோர் மட்டுமே அவர்களுடைய பிள்ளைகளைக் கூட்டிவரலாம் மற்றும் கூட்டிச்செல்லலாம்.
- உங்களுடைய பிள்ளையைக் கூட்டிவரும்போதும் கூட்டிச்செல்லும்போதும் நீங்கள் கையொப்பமிட வேண்டும்.
- வானிலைக்கும் இந்தத் திட்டத்தில் அவர்கள் செய்யவிருக்கும்செயற்பாடுகளுக்கும்ஏற்பஉங்களுடைய பிள்ளைக்கு உடை அணியுங்கள். உங்களுடைய பிள்ளை என்ன அணிய வேண்டும் என்பது தொடர்பாக உங்களுக்குக் கேள்விகள் இருந்தால் பணியாளர்களைக் கேளுங்கள்.
- உங்களுடைய பிள்ளையின் வழக்கமான நடைமுறைகளைப் பேணுவதற்கும் அவரைப் பாடசாலைக்குத் தயார்படுத்துவதற்கும் அவரை ஒழுங்காகக் கூட்டிவரல் முக்கியமாகும். உங்களுடைய பிள்ளை சமூகமளிக்காமல் இருக்கவேண்டியிருந்தால் அதைப் பணியாளர்களுக்குத் தெரியப்படுத்துங்கள்.
- உங்களுடைய பிள்ளைக்கு வருத்தமாக இருந்தால் அந்த வருத்தம் பரவாமல் தடுப்பதற்காக அவரை வீட்டில் வைத்திருங்கள். காய்ச்சல் அல்லது வயிற்றோட்டம் இருக்கும் பிள்ளைகள் CNCக்கு வரும் முன்னர் அந்த அறிகுறிகள் இல்லாமல் போய் 24 மணி நேரம் ஆகியிருக்க வேண்டும்.

---

## அனைத்தும் எங்களுடைய CNC திட்டம் பற்றியது

**பராமரிப்பாளரின் பெயர்கள்:**______________

Caregiver's Name / Nom du dispensateur de soins

**CNC நேரங்கள்:**______________

CNC Hours / Heures de garde d'enfant

| | ஆம் Yes / Oui | இல்லை Non / Non |
|---|---|---|
| நோய்த்தடுப்பு தேவைப்படுகிறது<br>Immunization required / L'enfant doit avoir été vacciné | ○ | ○ |
| நாங்கள் சிற்றுண்டிகள் வழங்குகிறோம்<br>We provide snacks / Nous fournissons des collations | ○ | ○ |
| உங்களுடைய பிள்ளைக்கு மதிய உணவு/ சிற்றுண்டிக்காக உணவு கொண்டுவாருங்கள்<br>Bring food for your child's lunch/snack / Apportez le déjeuner/la collation de votre enfant | ○ | ○ |
| உங்களுடைய பிள்ளையின் மதிய உணவின் போது நீங்கள் அவரைப் பராமரிக்கிறீர்கள்<br>You care for your child at lunch / Vous prenez soin de votre enfant au déjeuner | ○ | ○ |
| இங்கு பகல் நேர நித்திரை நேரம் உண்டு<br>We have a naptime / Notre programme prévoit une sieste | ○ | ○ |

| | ஆம் Yes / Oui | இல்லை Non / Non |
|---|---|---|
| ஆசுவாசப்படுத்தும் விளையாட்டுப்பொருள் கொண்டுவாருங்கள்<br>Bring a comfort toy / Apportez un jouet réconfortant | ○ | ○ |
| மேலதிக உடுப்புகள் கொண்டுவாருங்கள்<br>Bring extra clothes / Apportez des vêtements supplémentaires | ○ | ○ |
| உள்ளகத்துக்கான சப்பாத்துக்கள் கொண்டுவாருங்கள்<br>Bring indoor shoes / Apporter des chaussures d'intérieur | ○ | ○ |
| போர்வை ஒன்று கொண்டுவாருங்கள் (தேவைப்பட்டால்)<br>Bring a blanket (if needed) / Apportez une couverture (si nécessaire) | ○ | ○ |
| Diapers கொண்டுவாருங்கள் (தேவைப்பட்டால்)<br>Bring diapers (if needed) / Apportez des couches (si nécessaire) | ○ | ○ |

CMAS

குடிபெயர்ந்த இளம் பிள்ளைகளின் பராமரிப்பு மற்றும் குடியேற்றத்துக்கு ஆதரவளித்தல்

*மேலதிக பெற்றோர் ஆதாரவளங்களுக்குப் பார்வையிடுங்கள்:*
*www.cmascanada.ca*

Care for Newcomer Children


*Funded by: Immigration, Refugees and Citizenship Canada / Financé par : Immigration, Réfugiés et Citoyenneté Canada*